**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**திருக்கழுக்குன்றம்.**

முன்னிலை :– **திரு.S.வினீத், B.A.,B.L.,(Hon's)**
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
திருக்கழுக்குன்றம்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ம் நாள் செவ்வாய்கிழமை
பராபவ வருடம் சித்திரை மாதம் 08 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 125/2009**
**CNR No.TNCG120001162009**

அரசு தரப்பில்
காவல் உதவி ஆய்வாளர்,
மாமல்லபுரம் காவல் நிலையம்,
குற்ற எண் 86/2009

.. குற்றமுறையிடுபவர்.

எதிர்

1) ரூபன், வயது 28/2009, த/பெ. மணவாளன்
2) பிரகாஷ், வயது 35/2009, த/பெ.டேனியல்

.. எதிரிகள்.

**Case Summary**

| Sl.No. | Particulars | Report |
|---|---|---|
| 1 | The Period of remand of the accused | -NIL- |
| 2 | The date of filing of the complaint/final report in the Court | 20.08.2009 |
| 3 | The date of committal of the case to the Court of Session | Not Applicable |

<table>
<tr><td>4</td><td>The date of questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be</td><td>11.06.2015</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions Under Section 317 of the Code.</td><td>CMP No.401/2026 - petition u/s.311 Cr.P.C.- petition allowed.</td></tr>
<tr><td>6</td><td>Date of examination in-chief and cross- examination of a witness:</td><td><table><tr><td></td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>PW1</td><td>26.05.2016</td><td>26.05.2016</td></tr><tr><td>PW2</td><td>26.05.2016</td><td>26.05.2016</td></tr><tr><td>PW3</td><td>26.03.2026</td><td>26.03.2026</td></tr></table></td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under Section 313 of the Code:</td><td>07.04.2026</td></tr>
<tr><td>8</td><td>Details of abscondence of an accused and his appearance/productions, as the case may be: and NBW Pending/recalled</td><td>NIL</td></tr>
<tr><td>9</td><td>Grant of stay by superior Courts and the results thereof.</td><td>NIL</td></tr>
</table>

இவ்வழக்கு 15.09.2009 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள்

திரு.D.குமரேசன், திருமதி.S.இலக்கியா, திரு.D.சிவா ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

**1.** எதிரிகள் மீது, அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில், கடந்த 03.03.2009 ம் தேதி பகல் 12.00 மணியளவில் மாமல்லபுரம் – சென்னை செல்லும் கிழக்கு கடற்கரை சாலையில் பட்டிபுலம் கிராம எல்லையில் உள்ள பெண்டு கரை என்ற இடத்தில் புகார்தாரர் உதயசூரியன் என்பவரும் சாட்சி பஞ்சாட்சரம் என்பவரும் TVS Super XL TN 07 7020 என்ற வாகனத்தில் மாமல்லபுரம் நோக்கி வந்துக் கொண்டிருந்த போது எதிரிகள் இருவரும் வழிமடக்கி "ஓத்தா தெவிடியா, பசங்களா" என அசிங்கமாக பேசி 1வது எதிரி ரூபன் கத்தியால் சாட்சி பஞ்சாட்சரம் என்பவரின் முழங்கையிலும், முகத்திலும் வெட்டி பலத்த காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரிகள் சட்டப்பிரிவுகள் 341, 294(b), 326 இ.த.ச.வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2.** எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** எதிரிகளுக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ய போதிய கால அவகாசம் வழங்கியும், எதிரியிடம் குற்ற அறிக்கையில் கண்டுள்ள

குற்றங்கள் குறித்து விளக்கிக்கூறி வினவியபோதும், ஆவணங்களை பரிசீலனை செய்து, ஆவணங்களின் அடிப்படையில் 1 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 326–ன் கீழும், 2 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b)–ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக்கூறி வினவியபோதும் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள். எதிரிகளின் குற்ற மறுப்பினையடுத்து அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரித்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையும், அ.சா.பொ.1ம் குறியீடு செய்து வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**5.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சாராம்சம் பின்வருமாறு:–

**5.1.** புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், தன் பெரியப்பா பஞ்சாட்சரம் காயமுற்றது சம்மந்தமாக காவல் நிலையம் சென்றிருந்தபோது ஒரு கையொப்பம் போட சொன்னார்கள் என்றும், காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், புகார் வாக்குமூலத்தை காவல் நிலையத்தில் எழுதிக் கொண்டார்கள் என்றும், அதில் என்ன விவரம் உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும் கூறியதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2.** அ.சா.2 தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்மந்தமாக ஏதும் தெரியாது என்றும், போலிசார் விசாரணை செய்தபோதும் தனக்கு ஒன்றும்

தெரியாது என்று தான் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.2 பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

**5.3.** அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 03.03.2009ம் தேதி பகல் 3.00 மணியளவில் மாமல்லபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக கோவிந்தராஜ் நிலைய பொறுப்பில் இருந்த போது உதயசூரியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.86/2009 இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) –ன் கீழ் வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார், சுகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகள் உதயசூரியன், பஞ்சாட்சரம், கார்மேகம் மற்றும் மேற்படி பார்வை மகஜர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரி ரூபன் என்பவரை 03.03.2009 அன்று இரவு 20.45 மணியளவில் மாமல்லபுரம் – சென்னை செல்லும் இ சி ஆர் ரோட்டில் மாமல்லன் சிலை அருகே கைது செய்தபோது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சங்கர், குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 18 அங்குலம் கொண்ட இரும்பு கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தும், எதிரி பிரகாஷ் என்பவரை 03.03.2009 அன்று இரவு 20.00 மணியளவில் மாமல்லன் சிலை அருகே கைது செய்து அவர் தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் குமார் மற்றும் சங்கர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து இரண்டு எதிரிகளை நீதிமன்றக்

காவலுக்குட்படுத்தியும், வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தும், இவ்வழக்கில் சாட்சிகள் காலமேகம், சுகுமார், குமார் ஆகியோர்கள் எதிரிகள் மிரட்டியதாக வாக்குமூலம் அளிக்கவில்லை என்பதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 341, 294(b), 324, 506(ii) இ.த.ச.விலிருந்து சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324 இ.த.ச. வாக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தும், காயம்பட்ட நபரான பஞ்சாட்சரம் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்றும், பஞ்சாட்சரம் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியுள்ளதால் வழக்கின் சட்டப்பிரிவினை 341, 294(b), 324 இ.த.ச.விலிருந்து சட்டப்பிரிவுகள் 341, 294(b), 326 இ.த.ச. வாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை மற்றும் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்படி பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், எதிரி ரூபன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.6 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும், விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.10 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6.** இவ்வழக்கில் அரசுத் தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1), (ஆ)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோது எதிரிகள் அரசுத் தரப்பு சாட்சி கூறுவது பொய் சாட்சி என்றும், இவ்வழக்கு பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள். எதிரிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டது.

**7.** இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில், 1 வது எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 326–ன் கீழும், 2 வது எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 341, 294(b)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**8.** தீர்வு:– கடந்த 03.03.2009 ம் தேதி பகல் 12.00 மணியளவில் மாமல்லபுரம் – சென்னை செல்லும் கிழக்கு கடற்கரை சாலையில் பட்டிபுலம் கிராம எல்லையில் உள்ள பெண்டு கரை என்ற இடத்தில் புகார்தாரர் அ.சா.1 உதயசூரியன் என்பவரும் சாட்சி பஞ்சாட்சரம் என்பவரும் TVS Super XL TN 07 7020 என்ற வாகனத்தில் மாமல்லபுரம் நோக்கி வந்துக் கொண்டிருந்த போது எதிரிகள் இருவரும் வழிமடக்கி "ஓத்தா தெவிடியா, பசங்களா" என அசிங்கமாக பேசி 1 வது எதிரி ரூபன் கத்தியால் சாட்சி பஞ்சாட்சரம் என்பவரின் முழங்கையிலும், முகத்திலும் வெட்டி பலத்த காயம் ஏற்படுத்தியதாக எதிரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

**9.** இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 உதய சூரியன் தனது புகார் வாக்குமூலத்தில், கடந்த 03.03.2009 ம் தேதி பகல் 1.00 மணியளவில்

தானும் தன்னுடைய பெரியப்பா பஞ்சாட்சரம் என்பவரும் TVS Super இருசக்கர வாகனத்தில் கிழக்கு கடற்கரை சாலையில் பெண்டுகரை என்ற இடத்தில் வரும் போது முன் பின் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் இரு சக்கர வாகனத்தில் வந்து தங்களை மடக்கி அசிங்கமாக பேசி அதில் ஒருவன் கையில் வைத்திருந்த கத்தியால் தன பெரியப்பாவை வலது முழங்கையிலும், முகத்திலும் வெட்டி காயப்படுத்திவிட்டு கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள் என்று புகார் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலத்தை காவல் உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் பெற்று நிலைய குற்ற எண்.86/2009 இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

**10.** இவ்வழக்கில் காயமுற்ற நபரான பஞ்சாட்சரம் என்பவர் கடந்த 04.10.2015 அன்று இறந்துவிட்டார் என அரசு தரப்பில் தெரிவித்து அவரது இறப்பு சான்றின் நகல் தாக்கல் செய்யப்பட்டது. ஆவணம் பரிசீலினை செய்யப்பட்டது. காயமுற்ற நபர் பஞ்சாட்சரம் இறந்துவிட்டதால் அவரது சாட்சியம் கைவிடப்பட்டது.

**11.** இவ்வழக்கில் மேற்படி நிகழ்வு புகார்தாரர் உதயசூரியன் அ.சா.1 ஆகவும், சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சி காலமேகம் அ.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுள் அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரிகள் ரூபன் மற்றும் பிரகாஷ் ஆகியோர்களை தெரியாது என்றும், தன் பெரியப்பா பஞ்சாட்சரம் காயமுற்றது சம்மந்தமாக காவல் நிலையம் சென்றிருந்தபோது தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும்,

அ.சா.2 தனது சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். மேலும், நிகழ்வு புகார்தாரர் அ.சா.1 கொடுத்துள்ள அ.சா.ஆ.1 புகாரை பரிசீலிக்கையில், முன் பின் அடையாளம் தெரியாத நபர்கள் இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் வந்து தங்களை வழிமடக்கி அசிங்கமாக பேசி அதில் ஒருவர் கத்தியால் தன் பெரியப்பா பஞ்சாட்சத்தை வெட்டினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், அ.சா.1 காவல் நிலையம் சென்றிருந்த போது அ.சா.ஆ.1 புகாரில் கையொப்பம் வாங்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், இவ்வழக்கின் எதிரிகள் தான் அ.சா.1 மற்றும் சாட்சி பஞ்சாட்சரம் இருவரையும் வழிமடக்கி அசிங்கமாக பேசி 1வது எதிரி ரூபன் சாட்சி பஞ்சாட்சரத்தை கத்தியால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தி குற்ற செயலில் ஈடுபட்டார்கள் என்பது குறித்து அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் கொண்டு நிரூபிக்க தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12.** இவ்வழக்கில் நிகழ்வு புகார்தாரர் அ.சா.1 மற்றும் கண்ணுற்ற சாட்சி அ.சா.2 இருவரும் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ள நிலையிலும், மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியங்கள் எதிரிகளை வழக்கு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபடுத்துவதாக இல்லை என்பதாலும், காயம்பட்ட நபரான பஞ்சாட்சரம் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்துவிட்ட நிலையிலும், மற்ற சாட்சிகளை விசாரணை செய்வதால் எந்த பலனும் இல்லை என்று தெரியவரும் நிலையிலும், மேலும் இவ்வழக்கானது கடந்த 2009 ம் வருடம் கோப்பிற்கு எடுக்கப்பட்டு சுமார் 17 வருடங்களாக நிலுவையில் இருந்து வருவதால் மற்ற சாட்சிகளின்

சாட்சியங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டுவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு, கூடுதல் சாட்சியாக தற்போது மாமல்லபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வரும் முருகன் என்பவரை விசாரணை செய்யக்கோரி அரசு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மேற்படி காவல் உதவி ஆய்வாளர் முருகன் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.11 வரையும், அ.சா.பொ.1ம் குறியீடு செய்யப்பட்டது. மேற்படி அ.சா.3 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** இவ்வழக்கில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலிக்கையில் நிகழ்வு புகார்தாரர் அ.சா.1 மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற அ.சா.2 இருவரும் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ள நிலையிலும், காயம்பட்ட நபரான பஞ்சாட்சரம் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்துவிட்ட நிலுவையிலும், அ.சா.3ன் அலுவல் ரீதியான சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வருவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**<u>14. முடிவாக</u>**

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க

தவறிவிட்டதாக முடிவு செய்து, 1 வது எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 326–ன் கீழும், 2 வது எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச. பிரிவுகள் 341, 294(b)–ன் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும் எனவே, எதிரிகள் 1, 2 மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**15.** இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள வழக்கு சொத்தான C.P.No.167/2009 அ.சா.பொ.1 ஆன 18 அங்குலம் கொண்ட இரும்பு கத்தி ஒன்று மிகவும் துறுபிடித்த நிலையில் உள்ளதால் வழக்கின் மேல் முறையிட்டுக்காலம் முடிந்த பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(Sd) S.Vineeth, 21.04.2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், திருக்கழுக்குன்றம்.

பின் இணைப்பு:–

அரசு தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.உதயசூரியன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு.காலமேகம் |
| அ.சா.3 | திரு.முருகன், காவல் உதவி ஆய்வாளர். |

அரசு தரப்பு சான்றாவணங்கள்:–

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 03.03.2009 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | 03.03.2009 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 03.03.2009 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 03.03.2009 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 03.03.2009 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 03.03.2009 | 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி. |
| அ.சா.ஆ.7 | 03.03.2009 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.8 | 03.03.2009 | படிவம் 91 |
| அ.சா.ஆ.9 | –– | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.10 | 03.03.2009 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.11 | –– | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

அரசு தரப்பு சான்றுப் பொருள்:–

அ.சா.பொ.1 – 18 அங்குலம் கொண்ட இரும்பு கத்தி ஒன்று

எதிரிகள் தரப்பு சாட்சி:– இல்லை.

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை.

எதிரிகள் தரப்பு சான்றுப் பொருள்:– இல்லை.

(Sd) S.Vineeth, 21.04.2026
மா.உ.நீ.ம.நீ.ந./தி.க.கு.